**அக்குரெஸ்ஸ பிரதேச சபை - 2022**

------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அக்குரெஸ்ஸ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அக்குரெஸ்ஸ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் மற்றும் மீளாய்வாண்டின் சபைக்கு சொந்தமான ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொண்டிருந்த ரூபா 3,876,316 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தேறிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,091,779 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | செலுத்த வேண்டிய ரூபா 381,356 இற்கான செலவுகள் மூலதனக் கடன்கொடுத்தோரின் கீழ் போலவே பலவினக் கடன்கொடுத்தோரின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் பலவின கடன்கொடுத்தோர் மீதி அந்த எண்ணிக்கையால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா | மீதி தயாரிக்கப்பட்ட முறை தொடர்பாக விபரங்கள் கிடைத்த பின்னர் கடன்கொடுத்தோர் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 5,535,032 தொகைக்காக பலவினக் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (உ) | மீளாய்வாண்டு தொடர்பாக நீதிமன்றத் தண்டப்பணம் சிட்டையிடல் ரூபா 88,896 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 05 அறிவித்தல் பலகைகளுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 93,600 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத அறிவித்தல் பலகைகளுக்காக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், நீதிமன்றத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டப்பணம் உறுதியாக குறிப்பிட முடியாமையினால் கணக்கீடு செய்யப்படவில்லை என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 4,234,450 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 593,968 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 81,814 தொகைக்கான பலவின செலவுகளுக்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | நிலையான சொத்துக்களின் தன்மையில் காணப்படாத ரூபா 773,474 தொகை பெறுமதியான 37 பொருட் பதிவேட்டுப் பண்ட விடயங்கள் தொகை ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய கூட்டுத்தொகை ரூபா 5,563,364 பொது களஞ்சிய இருப்பு மீதி மற்றும் அதற்குரிய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 2,810,253 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 571 | 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 103,313 தொகைக்கான 14 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 06 மாதங்களை மிகைத்துள்ள வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி பிரிவுத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் வைப்புத் தாரர்களின் கோரிய பின்னர் செலுத்தும் அடிப்படையில் வைப்புக்களை சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 925,273 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 17,133,372 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 7,451,000 | 2,425,027 | 2,235,903 | 2,141,195 | 7,092,000 | 2,252,707 | 1,870,609 | 1,952,071 |
| ii. | வாடகை | 6,850,000 | 5,488,380 | 7,603,326 | 6,796,224 | 5,900,000 | 5,521,233 | 4,118,954 | 8,911,170 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,309,250 | 1,997,218 | 1,997,218 | - | 1,993,500 | 1,805,867 | 1,805,867 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 17,729,000 | 12,738,988 | 11,925,397 | 1,072,321 | 19,103,500 | 10,047,760 | 9,789,030 | 258,730 |
| | மொத்தம் | 34,339,250 | 22,649,613 | 23,761,844 | 10,009,740 | 34,089,000 | 19,627,567 | 17,584,460 | 11,121,971 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 1,853,144 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அவற்றில் 790 வீதவரி அலகுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 1,336,829 தொகையாகும். | நிலுவையை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 266 கடையறைகளில் 230 வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி அளவில் உள்ளவாறு அவற்றில் 166 வாடகையாளரிடம் ரூபா 6,215,246 இற்கான கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றில் 67 வாடகையாளர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,975,612 இற்கான மீதிகள் நிலுவைக் காலவரையறை 03 வருடங்களை மிகைத்திருந்தது. | நிலுவையை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | அக்குரெஸ்ஸ பிரதேச சபைக்குரிய 02 வர்த்தக தொடர்கட்டிடங்களில் காணப்படும் 42 கடையறைகள் எழுத்துமூலம் உடன்படிக்கையின்றி வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை மேற்கொள்ளக்கூடிய கடையறைகளுக்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கும் ஏனைய கடையறைகளின் வாடகை உரிமை சாட்டப்பட்ட பின்னர் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடையறைகள் வாடகைக்கு கொடுக்கும் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | அக்குரெஸ்ஸ பிரதேச சபைக்கு சொந்தமான பொது சந்தை வர்த்தக தொடர்கட்டிடத்தை சேர்ந்த 23 கடையறைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 1,905,734 தொகை மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாடகையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சுற்றறிக்கைகு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் நீதிமன்றத் | தென் மாகாண ஆளுனரிடம் இருந்து குறிப்பிட்ட பணம் பெற்றுக் கொள்வதற்காக | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தண்டப்பணம் ரூபா 1,479,052 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 40,961,620 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | | வேண்டப்பட்டுள்ளது என. |
| (ஊ) | அக்குரெஸ்ஸ பிரதே சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள 03 ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பாக கணிப்பீடுகள் மேற்கொண்டு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்திற்கு இணங்க கட்டணம் அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 126 (viii) இற்கு இணங்க சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள நகர்சார் அல்லாத எல்லையுள் மேற்கொள்ளப்படும் கட்டட நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக துணை விதிகள் சட்ட ஆக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. | துணைவிதிகளை இனங்கண்டு தற்போது தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஜனவரி 24 திகதிய 05/2018 (i) இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 திகதிய இலக்கம் 05/2008 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளவாறு பிரஜைகள் சாசனம் தயாரிக்கப்பட்டு சபையில் காட்சிப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரஜைகள் சாசனம் தயாரித்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் இணைப்பு 02 இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தவாறு மனித வள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | 2023 மே 31 திகதிக்கு முன்னர் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த களஞ்சிய இருப்பு பொழிப்பில் உள்ளடங்கிய ரூபா 25,593,657 தொகை பெறுமதியான 11 களஞ்சிய இருப்பு மீதிகள் இற்கான பண்ட இருப்புக்கள் பௌதீக ரீதியாக காணப்படாததுடன், நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்தும் காணப்படும் இந்த மீதிகள் தொடர்பாக சபையினால் உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட மீதிகள் ஏனைய உப அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் எனவும், இந்த மீதிகளை களஞ்சிய பொழிப்பில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதி தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடடிவக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது அக்குரெஸ்ஸ அதிகார பிரதேசத்தில் சிறுவர்கள் இடையே வினியோகிப்பதற்காக ரூபா 4,449,900 தொகை பெறுமதியான 120 பக்க CR புத்தகங்கள் 21190 தொகை தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்யும் போது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 132(ஓ), 1988 இன் பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி 14. 103, 178(7)(2), 207, 208, 211, 213 மற்றும் நிதிப் பிரமாணம் 237 ஆகிய ஏற்பாடுகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இது தொடர்பாக சாத்தியக்கூற்று அறிக்கையும் தயாரித்திருக்கவில்லை. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர் ஆகிய தலைவரின் எழுத்துமூல அறிவுரையின் மீது செயற்பட்டது எனவும் பிரதேச சபை அதிகார சட்டத்தின் 132(ஓ) பிரிவிற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன் என. | அதிகார சட்டம், விதிகள் மற்றும் நிதிப் பிரமாணத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | அக்குரெஸ்ஸ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருளாதார நெருக்கடி காணப்படும் பாடசாலை மற்றும் அறநெறிப் பாடசாலை சிறுவர்களுக்கு 2023 ஆண்டில் சீருடை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது 2025.5 யார் பொலியஸ்டர் புடவை ரூபா 800,000 தொகை செலவிடப்பட்டு புடவை விற்பனை நிலையம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்த போது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 132(ஓ), 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 14, 207, 208, 178(7)(2) நிதிப் பிரமாணம் 136(1) ஏற்பாடுகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் வினியோகிக்கும் செய்முறை அடங்கிய செயற்திட்ட அறிக்கை தயாரித்திருக்கவில்லை. | செயற்திட்ட அறிக்கை ஒன்று தயாரித்திருக்கவில்லை எனவும், சீருடை புடவை வினியோகித்தல் அதிபர்களின் மேற்பார்வையின் மேற்கொள்ளப்பட்டது எனவும். | அதிகார சட்டம், விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி 170 மற்றும் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.1.1 (இ) இற்கு புறம்பாக பெறுகை திட்டத்தில் அடங்கியிருக்காத ரூபா 5,449,900 தொகை பெறுமதியான மூன்று பெறுகைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் எழுத்துமூல அறிவுரையின் மீது பெறுகை வழிகாட்டல் கோவையின் முழுமையாக தவிர்ந்து கொள்ளாமல் முழுமையான வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |